சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.272/2014

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 24.03.2026 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | கலைமதி | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவின் இரண்டாவது எதிர்மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. ஒன்றாம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பாலிசி நகல் எ.மா.சா.ஆ.1

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

விபத்து தேதியன்று பாலிசி அமலில் இருந்தது என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாருக்கு சொந்தமான நான்கு சக்கர வாகனம் பதிவு எண். TN55 S 3940 என்ற வாகனத்தை அதை ஓட்டியவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி முன்னால் சென்ற வாகனத்தில் மோதியதில் மேற்படி வாகனத்தில்பயணம் செய்த மனுதாருக்கு மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக போலிசார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தினால் மனுதாருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி முதல் தகவல் அறிக்கையானது TN55 S 3940 ஓட்டுனர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் புலனாய்வு அதிகாரியை நாங்கள் நியமனம் செய்தோம் என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் நான்கு சக்கர வாகனத்தை அதன் ஓட்டுனர் அதிவேகமாக ஓட்டியதால் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றாலும் முதல் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு முழுமையான காப்பீடு எங்களது நிறுவனத்தில் உள்ளது என்பதாலும் எங்களது நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புலனாய்வு அதிகாரி எங்கள் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டவர் என்பதால் எங்களது நிறுவனத்திற்கு ஆதரவாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN

சார்பு நீதிபதி

குளித்தலை.